1.

Story of the 3 original Kulams, Gannapuram Grammam
T. Muthusamy, Munngangadu, 14/6/66

கணவாள குலம் கன்னபுரம் காணிக்கு வந்த வரலாறு

முன்காலத்தில் வடக்கு ஏதோ ஒரு ஊரிலிருந்து கணவாளகுலம் மாடுகளை ஓட்டிக் கொண்டு இங்கு (கன்னபுரம்) வந்து பால்கறந்து வியாபாரம் செய்து ஜீவித்து வந்ததாகவும். அவர்கள் வீட்டில் நெய் இருந்ததாகவும் அப்போது இங் குள்ள செங்கண்ண குலம், ஓதாள குலம் இரண்டு குலத்தாளிகள் வீட்டிலும் ஏதோ விசேஷம் வந்து இவர்கள் கணவாள குலத்தாரிடம் சென்று நெய்கேட்க அதற்கு அவர்கள் சொன்னது "எங்களுக்கு காணி பூமி கொடுத்தால் தான் நெய் ஊற்றுவோம்" என்று சொல்ல அதன்படி இவர்களும் கணவாளகுலத்துக்கு காணி பூமி கொடுத்ததாகவும் ஆனால் அக்குலத்திற்கு பெண் கொடுக்கவில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

முன்காலத்தில் இந்நாட்டை முஸ்லீம் ஆண்டு வந்தபோது. அவர்கள் படைகளை ஜெயிக்க பல்லுடன் குழந்தை பிறந்தால்தான் முடியுமென்று மக்கள் நினைத்தார்கள். அதன்படி செங்கண்ண குலத்தில் பல்லுடன் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்து படைகளை ஜெயித்து விட்டதால் "பல்லவராயர்" என்ற பட்டம் கிடைத்தது.

ஏ. யாரு சிலம்பரம் என்ற ஊரிலிருந்து செங்கண்ணகுலம் வந்து படைகளை வென்றீர்கள் என்றும். பல்லவராயர் என்ற பட்டம் வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

செங்கண்ண குலத்தில் வெள்ளை நிறமாக பெண் பிறந்தது. அப்பெண்ணை கல்யாணம் செய்ய யாரும் முன் வராமல், கடைசியில் பரஞ்சேர்வளி என்ற ஊரிலிருந்து ஓகாள குலத்தை அழைத்து வந்து, அவருக்கு மண்ணையும் கொடுத்து பெண்ணையும் கொடுத்து காணியும் கொடுத்து வைத்துக் கொண்டதாக சொல்கிறார்கள்.